சுகாதார அமைச்சுதீர்வு காண இருந்த ஒரே வழி கூடுதல் பதவிகளை உருவாக்குவதுதான். தேவைக் கேற்ப ஒப்பந்த

யாளர்களாக நிரந்தரப் பணியாளர் களாக அமர்த்தப்பட்ட மருத்துவர் களுக்கும் ஒப்பந்த அடிப்படையி லான மருத்துவர்களுக்கும் இடையே சம்பளம், பட்டப்படிப்

கான கல்வித் தகுதியை உயர்த்தினேன் என்று டாக்டர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார். மருத்துவ பள்ளிக்குச் செல்ல எங்களுக்கு தேவைப்பட்டது

ஒர் அணுகுமுறை. சிறந்த கல்வியை தொடர ஒப்பந்த பணியாளர் களுக்கு சம வாய்ப்பு வழங்குவது இரண்டாவது அணுகுமுறை.

# தொழில்துறை தடுப்பூசி திட்டத்திற்கு எம்.டி.சி. வெ.13 லட்சம் ஒதுக்கீடு

கோலாலம்பூர், செப். 3-

நாட்டின் வெட்டுமர தொழில் துறைகளைச் சார்ந்த தொழிலாளர்கள் கோவிட்-19 தடுப்பூசிகள் பெறுவதை துரிதப்படுத்தும் பொருட்டு தொழில் துறை தடுப்பூசி திட்டத்தின் கீழ் 13 லட்சம் வெள்ளியை மலேசிய வெட்டுமர கழகம் (எம்.டி.சி.) ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நோக்கத்திற்காக சிலாங்கூர், பந்திங், ஒலாக் லெம்பிட் எனும் பகுதியில் தடுப்பூசி மையம் ஒன்றை எம்.டி.சி. அமைத்துள்ளது. 2021 ஆகஸ்ட் 16 ஆம் தேதி வரையில் 10,005 தொழிலாளர்களுக்கு முதல் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று எம்.டி.சி. தலைமை செயல்முறை அதிகாரி முஹ்தார் சுஹைலி கூறியுள்ளார்.

ஒலாக் லெம்பிட் தடுப்பூசி மையத்தில் 2021 ஜூலை 28 ஆம் தேதி தொடங்கிய விவசாய துறைகளைச் சார்ந்தவர்களுக்கான கோவிட்-19 தடுப்பூசி திட்டம் 2021 செப்டம்பர் 6 ஆம் தேதி ஒரு முடிவுக்கு வரும்.

தொழிற்சாலைகளில் வேலையிட தொற்றுப் பரவலை தடுக்கும் ஒரு நடவடிக்கையாக தேவைப்படும் மானியங்களை வழங்குவதற்கு மற்ற மாநிலங்களில் உள்ள வெட்டுமர சங்கங்கள் அல்லது நிறுவனங்களுடன் எம்.டி.சி. தொடர்பு கொள்ளும் என அவர் தெரிவித்தார்.




ஒலாக் லெம்பிட் தடுப்பூசி மையத்தில் எம்.டி.சி. பணியாளர்களுடன் முஹ்தார் சுஹைலி (வலமிருந்து மூன்றாவது).

கோவிட்-19 தொற்றுடன் நாம் வாழும் நிலை ஏற்படலாம். தொழில்கள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்வதற்கு பாதுகாப்பான வேலை யிடங்களை உருவாக்குவது அவசியமாகும். ஒவ்வொரு தொழிற்சாலை ஊழியருக்கும் ஒரு தடுப்பூசிக்கு 30 வெள்ளி உதவித்தொகையை எம்.டி.சி. வழங்கும் என முஹ்தார் சுஹைலி மேலும் கூறினார்.

கோவிட்-19 நடமாட்டக் கட்டுப்பாடு காரணமாக கடந்த ஜூன் மாதம் மட்டும் தினசரி 6 கோடி வெள்ளி இழப்பு ஏற்பட்டிருப்பதால் மிகப்பெரிய அளவிலான தடுப்பூசி நடவடிக்கைகளுக்கு எம்.டி.சி. முழுமையான ஈடுபாட்டை காட்டுகிறது.

MALAYSIAN TIMBER COUNCIL

தொழிற்சாலைகளில் தடுப்பூசி பெற்றுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் அதன் மனித ஆற்றல் அளவு அமைய வேண்டும் என்ற அரசாங்கத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப சாத்தியமான வரையில் தங்கள் தொழிலாளர்கள் அனைவரும் விரைந்து தடுப்பூசி பெறுவதை தொழில் உரிமையாளர்கள் உறுதி செய்து வருகின்றனர்.

மூவார் தளவாட சங்கமும் இதுபோன்ற தடுப்பூசித் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. இதன் வழி சுமார் 30,000 தொழிற்சாலை ஊழியர் களுக்கு தடுப்பூசி செலுத்தப் படும் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

## எஸ்ஆர்சி வழக்கு : அக். 11க்குள் பதிலளிக்க நஜீப்பிற்கு உத்தரவு



கோலாலம்பூர், செப். 3-

மொத்தம் 4 கோடியே 20 லட்சம் வெள்ளி எஸ்ஆர்சி நிதி சம்பந்தப்பட்ட நம்பிக்கை மோசடி மற்றும் சட்டவிரோத கடமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எஸ்ஆர்சி இன்டர்நேஷனல் செண்டிரியான் பெர்ஹாட்டினால் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கிற்கு அக்டோபர் 11ஆம் தேதிக்குள் பதிலளிக்கும்படி முன்னாள் பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் ரசாக்கிற்கு கோலாலம்பூர் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. டிசம்பர் 13ஆம் தேதிக்குள் பிரதிவாதாப்பிற்கு பதிலளிக்கும்படி வாதிக்கும் (எஸ்ஆர்சி) நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாக எஸ்ஆர்சி சார்பில் ஆஜராகும் ரோஸ்லி டஹ்லான் சரவணா சட்ட நிறுவனத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் கூறினார்.

மேலும், வழக்கு நிர்வாக அம்சங்களின் பரிசீலனைக்கு டிசம்பர் 14ஆம் தேதியை நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது. இது ஆன்லைனில் நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மூத்த உதவி பதிவாளர் நூர்சுரா முகமட் டின் முன்னிலையில் நேற்று ஆன்லைனில் நடத்தப்பட்ட வழக்கு நிர்வாக அம்சங்களின் பரிசீலனைக்குப் பின்னர் அவர் இந்த விவரத்தை வெளியிட்டார்.

எஸ்ஆர்சி நிதியிலிருந்து தனிப்பட்ட முறையில் பயன... நஜீப் தம்முடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தத... நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டதாகவும் கூறி 1எம்டிபி ... நிறுவனமான எஸ்ஆர்சியும் எஸ்ஆர்சியின் துணை நிறுவ... கண்டிங்கான் மெந்தாரி செண்டிரியான் பெர்ஹ... (ஜிஎம்எஸ்பி) மே 7ஆம் தேதி ரிட் சம்மன் தாக்கல் செய்...

2012 மே முதல் தேதியிலிருந்து 2018 மார்ச் 4ஆ... வரையில் எஸ்ஆர்சி லிமிட்டெட் ஆலோசகராக பதவி ...

# 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கை அனைவரின் கருத்துகளை கேட்டறிவேன்

## கோவிட் - 19 சுய பரிசோத... கருவியின் விலை வெ. 1...

